## அத்தியாயம் 12

# இசைக் கோகிலம் மீராஉம்மா

*நாட்டார் பாடல் என்னும் கவியைப் பற்றிச் சிந்திக்கும்போது உடன் நினைவுக்கு வரும் பெயர் மீராஉம்மாவாகும். இன்று கவி படிப்பதில் மிகவும் பிரபல்யம் பெற்றவர் அவரே. பல மெட்டுக்களில் பல்வேறு நாட்டார் பாடல்களை இசைக்கும் ஆற்றல் இவருக்குண்டு. முஸ்லிம் சமய, பண்பாட்டலுவல்கள் ராஜாங்க அமைச்சராக அல்ஹாஜ். ஏ.எச்.எம். அஸ்வர் பணியாற்றும் பொழுது அவ்வமைச்சு இவரது திறமையைப் பாராட்டி 1991ஆம் ஆண்டு மார்ச் மாதம் 12ஆம் திகதி சௌதுல் அந்தலீப் (இசைக்குயில்) எனும் பட்டத்தையும், பணப்பரிசில், சான்றிதழ், விருது என்பவற்றையும் வழங்கிக் கௌரவித்தது.*

*1975 நவம்பர் 15 இல் கல்முனையில் நடந்த அரச சாஹித்திய விழாவிலும் கலாசார அமைச்சினால் இவர் பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப்பட்டார்.*

*மீராஉம்மாவின் பிறப்பிடமான இறக்காமம் பழம்பெருமை வாய்ந்த முஸ்லிம் கிராமங்களில் ஒன்றாகும்.*

*அம்பாறை நகரத்திலிருந்து ஐந்து கிலோ மீற்றர் தூரத்துக்கப்பால் இறக்காமம் வில்லின் கரையிலே இக்கிராமம் அமைந்துள்ளது. நீர்ப்பாசனக் குளங்களை 'வில்' என அழைக்கும் மரபு இப்பிரதேசத்திலுண்டு.*

*இலங்கையில் மட்டுமன்றிப் பிறநாடுகளிலும் அறிமுகமான பணிக்கர்கள் பலர் இக்கிராமத்தைச் சேர்ந்தவர்கள். சீனிப்பணிக்கர், கலந்தர் லெவ்வைப் பணிக்கர் போன்றோர் நூற்றுக்கணக்கான யானைகளைக் கொண்ட கூட்டமொன்றுள் தாம் பிடிக்கவேண்டிய யானையைத் தேர்ந்து*

அக்கூட்டத்தைப் பின்தொடர்ந்து சென்று தாம் தேர்ந்தெடுத்த யானையின் காலில் தொண்டை மாட்டிப் பிடிக்கும் அனுபவம் மிகப் பயங்கரமானது. ஆனால் இப்பணிக்கர்களுக்கு இது மிகக் கைவந்த கலையாகும்.

இக்கிராமத்தைப் பிறப்பிடமாகவும், அக்கரைப்பற்றை வசிப்பிடமாகவும் கொண்ட மீராஉம்மாவின் கண்கள் இயற்கையில் பார்வையற்றவையாயினும் அல்லாஹ் அவரது மனக்கண்ணை மிகத் திறந்திருக்கிறான்.

இவர் மிகவும் விரும்பிப் படிக்கிற நாட்டார் பாடல்களிற் பின்வருவன சிலவாகும்.

**தாலாட்டு**

ஆராரோ ஆருயிரோ
ஆறுமைந்துக்கப்பாலே
ஆராய்ந்தறியும் பொருளை
அறிந்துணர்ந்து நித்திரைசெய்.

நித்திரைக்கோ நீயழுதாய்
என்நேசமுள்ள பாலகரே
கத்திறதைக் கேட்டு மனம்
கலங்குதப்பா நித்திரைசெய்.

முத்துக்கலிமாவை
மௌனத்தியானம் செய்து
நெத்தியின் மத்திதனில்
நிலைநிறுத்தி நித்திரை செய்.

உள்ளபடி நடக்க
உள்ளும் புறமும் ஒன்றாக
உள்ளமையைக் கண்டறிந்து - மக
உற்றுணர்ந்து நித்திரைசெய்.

**பெண்:**

*சரசரண்டு ஓடிவந்து*
*தலைவாசலிலே வந்து நின்று*
*கதவில் தெறிக்காய் - நீ*
*யார் வாப்பா ஒரு முறைக்கு.*

**ஆண்:**

*ஆரு எவருமில்ல மச்சி*
*நாங்க அல்லசக்காரரில்ல*
*உங்கமாமி மகன் மச்சான் என்று - நீ*
*மதிக்கலையா கிளியே.*

**பெண்:**

*எங்க மாமி மகன் மச்சான்*
*அவர் பஞ்சணையில்தான் படுப்பார்*
*வந்தரட்ட இன்னேரம் என்னை - தம்பி*
*யார் வாப்பா ஒரு முறைக்கு.*

**ஆண்:**

*நீ என்னை மதிக்கலையோ*
*என்ர விலராசம் மந்திரியே*
*என்ர கண்ணான மச்சி - நீ*
*கதவுதிறகா கிளியே.*

*சின்னப்பருவம் புத்தி*
*தெரியாத நாளையில*
*அரிசி களவெடுத்து - மச்சி*
*அப்பம் வாங்கிச் சாப்பிட்டோம்.*

அரிசி களவெடுத்து
நாங்க அப்பம் வாங்கித் திண்டு போட்டு
தருமக் கிணத்தடியில் - மச்சி
தண்ணி அள்ளித் தந்தாயே.

**பெண்:**

இந்தக் கதை கேளப்போதும்
மிச்சமாய்ப் பேசாமல்
வந்த வழியால் வழிக்கிறங்கி
நீங்க போங்கோ ராசாவே.

**இரங்கற் பாடல்கள்**

வரிசை நபி யிடத்தில் நான்
வழமாகக் குந்தியிருந்து
சலவாத்துச் சொன்னேன்
எனக்குத் துணைபுரிவாய் ஆண்டவனே.

யாநபியே யாநபியே
எங்கள் முகம்மதுவே
அந்த அண்ணல் முகம்மதரை - ரஹ்மான்
நான் அன்புடனே போற்றுகின்றேன்.

தாங்களன்றி எங்கள் உதவி
தயவு செய்ய யாருமில்லை
பாங்கா யானொதுங்க
முகம்பார்த்து விடுங்கோ நபியே.

550

பொறுமை நபியைப்பற்றி
நாமே எந்நாளும் நம்முடைய
'நபு' எனும் திக்ரை - மச்சி
உள்ளமதில் நிலைநாட்டு.

நேசமுள்ள ஹக்கனிடம்
நினைத்தபடி நாம் கேட்டா
அந்தச் சோதி ரகுமான்
துணைபுரிவான் தெரியாதோ.

தீன் எனும் மார்க்கம் அதை
நம்முடைய சிந்தையிலே கேட்டோம் என்றால்
அல்லாஹு மனமிரங்கி
நம்மளை அன்பால் போற்றிடுவான்.

பகலும் இரவையிலும்
படுக்கின்ற நேரத்திலும்
என்ட நேசமுள்ள புள்ள - நீங்க
நித்திரையில் அதைக் கேட்கவேணும்.

தஹஜ்ஜத்து நேரத்தில்
கதிர் நிறைந்த ஹக்கனிடம்
உண்மையாக அதைக் கேட்டால் - புள்ள
ஒளியாமல் காட்டிடுவான்.

உண்மை அதைக் கேட்க
நாம் உடனடியாய் எழும்பித்
தொழவேண்டும் என்று ரகுமான்
உன்ர சிந்தனையில் வேண்டுகின்றேன்.

பீற

எட்டாத கொப்பில்
எலந்தப்பழம் பழுத்து
பாதிதிண்டு ஓடுதற்கு
என்ட பத்தினிக்குக் கூடுதில்லை.

கரும்பை நறுக்கினாப்போல்
கல்கண்டு இனிக்கிறாப்போல்
தேனை அள்ளி ஊற்றினாப்போல் - இப்போ
தெகிட்டுதில்ல உன் உறவு.